# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1834/43 - 2013 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2013.11.01

1834/43 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : 3/1/3/11

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/3/2010/ws/299

பொது மக்களின் தேவைக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரங்கள்:-**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், ஹேவாசிஸ்ஸ கோரளையின் சிறு பிரிவில், உனுவின்ன என்ற கிராமத்திலமைந்த, நில அளவை மாஅதிபரால் அளந்து, 2013.09.30 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட மஹ 6293 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் காணித் துண்டிலக்கம் 1 எனக் குறிப்பிடப் பட்டுள்ள "மகஹயாய" என்னும் காணியில் சுமார் 0.0031 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.

காணித்துண்டிலக்கம்:1, காணியின் பெயர்: "மகஹயாய" விஸ்தீரணம்: 0.0031 ஹெக்டயார்

வடக்கு ஆர்.பீ.ஆர். அபேசேகர மற்றும் வேறு சிலர் உரிமைகோரும் மகஹயாய;

கிழக்கு: ஆர்.பீ.ஆர். அபேசேகர மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் மகஹயாய;
தெற்கு: பாதை, கண்டி கிருஸ்தவ பாதிரியார் உரிமைகோரும் சாந்த மரியா தேவாலய காணி மற்றும் ஆ.வ. மஹ 6275 ல் காணித்துண்டிலக்கம் 1;
மேற்கு: ஆ.வ. மஹ 6275 ல் காணித்துண்டிலக்கம் 1.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்:
01.ஆர்.பீ.ஆர். அபேசேகர, இல.3/141, பொல்ஹேன்கொட, கொழும்பு 05.

மற்றும்

2. ஆர்.பீ .ஆர். அபேசேகர, ரதுகோதிகல, அலவத்துகொட.

மேற்குறித்த காணிகளுக்கு உரிமைகோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2014, சனவரி மாதம் 14 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வேண்டும்.

மேலும், 2014, சனவரி மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணிக்கு தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எடுத்துக் கொள்ளுதலுக்கான நட்டஈடு கோருவதற்குரிய காரணங்கள் பற்றிய விபரங்களையும் நட்டஈட்டுத் தொகை, அத்தொகையை கணக்கீடு செய்த முறையையும் கடிதமூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஒப்பனை பரிசீலனை செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

மதுபானி பியசேன,
பிரதேச செயலாளர்,
பாத்த ஹேவாஹெட்ட.

பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலகம்,
தலாத்துஓய,
2013, ஒற்றோபர் 30.

11- 624

---

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல:3/கட்டா/காசு/85

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத் தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் அல்லது ஆட்சி உரிமையின் விபரம்:-**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், கட்டான பிரதேச செயலாளர் பிரிவில், தாசிய பத்துவை , சிறு பரிவில் உள்ள, முகலன்கமுவ மற்றும் அம்பலாங்கமுவ கிராமங்களில் அமைந்துள்ள, கம்பஹா நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 3905 விபரிக்கப்பட்டுள்ள 1.2888 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித் துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: தல்கஹவத்தை அலியஸ் கெரவிவேவெல; தற்போதைய காணியின் உபயோகம்; சதுப்பு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம்; விஸ்தீரணம்: 1.2888 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு/ ஆட்சி உரிமை எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டான பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில், அவர்களுக்குள்ள உடந்தைகளின் தனிமையையும், குறித்த காணியை/ஆட்சி உரிமையை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு (2) பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே.ஜீ. எச். எச். ஆர். கிரியெல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டான.

பிரதேச செயலகம்,
கட்டான,
2013, ஒற்றோபர் 30.

11- 625